தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 27, பிரமோதூத–திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, மே 10, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்;

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு,''

அறிவுடையவரின் நட்பு, பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது. அறிவல்லாதவரின் நட்பு, முழுமதி தேய்ந்து, பின் செல்லுதல் போன்ற தன்மையுடையது.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

சட்டக்கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் உதவிப் பேராசிரியர்கள்.

*2172 திரு. செ. நூர்முகமது:
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள சட்டக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப் படையில் உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

(இ) அவர்களை காலியிருக்கும் நிரந்தரப் பணியிடங்களில் நிரந்தரமாக நியமனம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்புக் கல்வி ஆண்டில் 1989–90 ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மொத்தம்:—

விரிவுரையாளர் மேல்நிலை சட்டம்	விரிவுரையாளர் மேல்நிலை சட்டமல்லப்பாடம்	பகுதிநேர விரிவுரையாளர்.
(1)	(2)	(3)
23	8	18

[1990 மே 10

(இ) ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட நபர்கள்—ஆசிரியர்கள் தேர்வாணையத்தினால் தேர்வு செய்யப்பட்டால் நிரந்தரப்படுத்த இயலும்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டால், அவர்களுக்கு நிரந்தரமாகப் பணி வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், இந்த சட்டக் கல்லூரியில் பணிபுரியக்கூடிய சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், நான்கைந்து ஆண்டு காலமாக தொடர்ந்து அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள், அரசினால்தான் நியமனம் செய்யப்பட்டார்கள். எனவே நீண்ட காலமாக, அரசினால் நியமனம் செய்யப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றக் கூடிய அவர்களை, தேர்வு வாரியம் மூலமாகத்தான் அவர்கள் நிரந்தரப் பணியிலே அமர்த்தப் படுவார்கள் என்பதற்கு பதிலாக, நிரந்தர காலியிடங்களில் அவர்களைப் பணியில் அமர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் அந்தவகையில் இல்லை. இப்போது, அப்படிப் பணியாற்றக் கூடியவர்களின் மொத்த எண்ணிக்கையே 50 பேருக்குள் தான். அந்த 50 பேரும் கூட, தற்காலிகமாக மட்டும்தான் நியமிக்கப்பட்ட அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களுடைய தகுதிகளைப் பார்த்து, அரசாங்கம் நியமித்தாலும் கூட, தேர்வாணைக்குழு, அதன் மூலமாக இன்னும் தேவைப்படக் கூடியவர்களின் பட்டியலையும் சேர்த்து நடத்தும் தேர்வில் அவர்கள் அந்தத் தகுதியினாலே தேர்வு செய்யப்படுவார்களேயானால், தேர்வாணையம்தான் அவர்களைப் பணியில் அமர்த்த முடியும், அப்படிப்பட்ட தேர்வாணையத்தின் மூலமாக நிரந்தரமானப் பணி வழங்கப்படலாம் என்பதுதான் அரசாங்கத்தினுடைய விதிகள் நமக்குக் கூறுகின்றன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, தேர்வு வாரியத்தின் மூலமாகத்தான் அவர்களை நிரந்தரப் பணியிலே அமர்த்த முடியும்; அதுதான் விதி என்று சொன்னார்கள், நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்கள் இத்தனை ஆண்டுகாலமாகப் பணிசெய்ததன் காரணமாக அவர்கள் அனுபவம் மிக்கவர்களாக, கல்வி போதிப்பதிலே திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே, அனுபவம் இல்லாதவர்களும், இவர்களும் ஒரேயடியாகத் தேர்வாணையத்தால் பரிசீலனை செய்யப்பட்டு, அனுபவம் இல்லாதவர்களை எடுப்பதற்குப் பதிலாக, இப்படி அனுபவம் பெற்ற, கல்வி போதிப்பதிலே திறமை பெற்ற இவர்களை, முன்னுரிமை கொடுத்து, எடுக்க

வேண்டுமென்றாவது, தேர்வாணையத்திற்கு அரசாங்கம் பரிந்துரை செய்ய இயலுமா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை என்ற அந்த வார்த்தை, நேரடியாக இடம் பெறாவிட்டாலும் கூட, அவர்கள் ஆசிரியர்களாக இருந்து பணி செய்த காலத்திற்கு, அதற்கான ஒரு தகுதி எண் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்தவகையில் அவர்கள் தேர்வு பெறலாம். மற்றொன்று, இப்படிப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கப்படுகிறபோது, ''கம்யூனல் ரொட்டேஷன்'' பார்க்கப்படுவது இல்லை. வகுப்பு விகிதாச்சார அடிப்படையில் நிரந்தரப் பணிகள் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை, தேர்வாணையத்தின் மூலமாகத்தான் நாம் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கிறோம்.

திரு. வீ. பெ. துரைச்சாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் எத்தனை தனியார் சட்டக்கல்லூரிகள் இருக்கின்றன? அங்கே படிக்கிற மாணவர்கள், நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றபின் தான் சேர்க்கப்படுகிறார்களா? அல்லது வேறு எந்த முறையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்கான விடை இப்போது என் இடத்திலே இல்லை. தனியார் கல்லூரி ஒன்று இருப்பதாக நான் அறிவேன். அது பற்றிய விவரம் இப்போது கூற வாய்ப்பில்லை.

திரு. அ். லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் சென்னையிலே மட்டும்தான் சட்டக்கல்லூரி இருந்தது. நான் எல்லாம் அங்கே படித்த மாணவன். அதற்கு ஒரு தகுதி அல்லது பல்கலைக் கழகத்தைப் போன்ற ஒரு பெருமதிப்பு இருந்தது. இப்போது பல சட்டக் கல்லூரிகள் தோன்றி அவை உயர்நிலைப்பள்ளியைப்போல் ஆகி விட்டன. மேலும், ஆசிரியர்கள் அடிக்கடி ஒப்பந்த அடிப்படையில் மாற்றப்படுவதால், கல்வியினுடைய தரமும், போதிக்கப்படுகின்ற அந்தத் தரமும் குறைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, நிரந்தரமாக இப்படிப்பட்ட சட்டக்கல்லூரிகளிலே நிரந்தர ஆசிரியர்களை, நல்ல ஆசிரியர்களை நியமிக்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இரண்டு விதமான கருத்தும் கண்ணோட்டமும் தொடர்ந்து, அதுவும் வேறு எங்கே ஏற்படாவிட்டாலும், சட்டமன்றத்திலே ஏற்படும்.

சென்னையிலே மட்டும் கல்லூரி இருந்தபோது சிறந்த வழக்கறிஞர்கள் வந்தார்கள் என்று ஏ.எல்.எஸ். அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் திருநெல்வேலியிலே ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று இன்னொரு நேரத்திலே அவர்கள் கேட்பார்கள், கேட்டும் இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அதைப்போல, ஒப்பந்த அடிப்படை ஆசிரியர்கள் எல்லாம் சிறந்த பயிற்சி, தேர்ச்சியுடைவர்களாக இருக்கிறார்கள் என்று திரு. நூர்முகமது அவர்கள் சொல்கிறபோது, தேர்வாணையம் மூலம் சிறந்த தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுக்க, நிலையாக நியமிக்க வழி செய்யப்படுமா என்ற கேள்வி எழுகிறது. எனவே, இவைகள் எல்லாம் எழுகின்ற கேள்விகள். அவைகளுக்கான சரியான பதிலைச் சொல்ல எனக்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல்கலைக்கழகங்கள் கூட இப்படி விரிந்து கொண்டு போனால் ரொம்ப சிரமமாக இருக்கும். எனவே, திருநெல்வேலி பல்கலைக்கழகத்தை முடிந்தால் நிறுத்தி வைக்கலாமா என்று கேட்டுக்கொள்ளலாம். (சிரிப்பு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, தனியார் சட்டக்கல்லூரிகளிலே ஆசிரியர் நியமனம், புரொபசர்ஸ் மற்றும் லெக்ச்சரர்களுக்கு, கான்ட்ராக்ட் பேசிஸுக்கு ஏதாவது, சர்க்காரினாலே சட்டத்திலே ரெகுலேட் பண்ணப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி விவரங்கள் தெரிவிக்க முடியும்.

தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம்.

*6624 திரு. பெ. சு. திருவேங்கடம்:
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்க புதிய வழிமுறைகளை அரசு செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.